வான்முகில்

VAAN MUHIL
empowering communities

# அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்

(Constitutional Rights Education Programme)

15 கவிதா நகர், மகாராசா நகர் அஞ்சல், திருநெல்வேலி – 627 011


# அகில உலக மனித உரிமைகள் தினம்

## International Human Rights Day, 2022

## —— 75th Anniversary of the UDHR ——

## வைர விழாக் கொண்டாட்டங்கள்

# கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகள்

மனித குல வரலாற்றில் மிக முக்கியமான மைல்கல்லாக கருதப்படுகிற **"அகில உலக மனித உரிமைப் பிரகடனம், 1948"** ஐ.நா. பொது அவையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட டிசம்பர் 10 ஆம் நாளே **"மனித உரிமை தினமாக"** உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இப்பிரகடனம் உயரிய மனித மதிப்பீடுகளை உலகுக்குப் பறைசாற்றுகிறது; இந்த அடிப்படை மனித உரிமைகள் உலகு தழுவியவை; பிரிக்க முடியாதவை; மீறப்படமுடியாதவை; மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொரு மனிதருக்குள்ளும் இருப்பவை. *இப்பிரகடனம் இயற்றப்பட்ட 75வது ஆண்டுக் கொண்டாட்டங்கள் இந்த ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாள் முதல் தொடங்கி இருக்கின்றன. ஐ.நா.அவை இந்தக் கொண்டாட்டங்களுக்கான கருப்பொருளாக "மனித மாண்பு, சுதந்திரம் மற்றும் அனைவருக்கும் நீதி" என்று அறிவித்துள்ளது.* இதன் அடிப்படையில் சிறப்பு நிகழ்வுகள் உலகின் பல பகுதிகளிலும் நடைபெற இருக்கின்றன. அரசுகள், அரசுசாரா அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புகள் வெவ்வேறு தளங்களில் இக்கருப்பொருளை மையமாகக் கொண்டு விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்த வேண்டும் என்று ஐ.நா. அவை கேட்டுக் கொண்டுள்ளது. பொருள் பொதிந்த இக்கருப்பொருளை மையமாகக்கொண்டு **"இவ்வைர விழா"** ஆண்டைக் கொண்டாடும் நோக்கில் **வான்முகில்** அமைப்பின் **அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்** கல்லூரி மாணவர்களுக்கு மூன்று போட்டிகளுக்கான அறிவிப்பை வெளியிடுகிறது.

## பொதுவான விதிமுறைகள்

1. யார் பங்கேற்கலாம்: தமிழகம் – புதுவையிலுள்ள கலை/அறிவியல், சமூகப்பணி, சட்டம், கல்வியியல், பொறியியல் கல்லூரிகளில் இளங்கலை, முதுகலை பயிலும் மாணவர்கள் பங்கேற்கலாம்.
2. போட்டியில் பங்கேற்போர் 10 சனவரி, 2023க்குள் அந்தந்த கூகுள் படிவம் மூலம் முன்பதிவு செய்ய வேண்டும். குறும்படம் அனுப்ப வேண்டிய கடைசி நாள் 18 சனவரி, 2023.
3. போட்டியாளர்கள் கல்லூரியில் பயில்வதற்கான ஆவணத்தை இணைத்து அனுப்புதல் வேண்டும் (முதல்வர் / துறைத் தலைவரின் கடிதம் / கல்லூரி அடையாள அட்டை).

## 1. கல்லூரி மாணவர்களுக்கான குறும்படப் போட்டி

**கருப்பொருள்:**

**“மாண்பு, சுதந்திரம் மற்றும் அனைவருக்கும் நீதி” - “DIGNITY, FREEDOM AND JUSTICE TO ALL”**

**குறும்படப் போட்டிக்கான விதிமுறைகள்:**

1. **குறும்படத்தின் கால அளவு 5 முதல் 7 நிமிடங்கள். மேற்கண்ட கருப்பொருளை மையப்படுத்தி அமைந்திருத்தல் அவசியம்.**
2. **குறும்படப் போட்டியில் பங்கேற்போர் https://forms.gle/8wQX9aB7ivhPgoYWA என்ற கூகுள் படிவத்தில் முன்பதிவு செய்ய வேண்டும்.**
3. குறும்படம் தமிழில் இருக்க வேண்டும். ஆங்கில சப் டைட்டில் (subtitles) இருக்கலாம்.
4. இப்போட்டியில் கல்லூரி மாணவர்கள் தனியாகவோ, குழுவாகவோ பங்கேற்கலாம்.
5. குறும்படம் தங்களின் சொந்தப் படைப்பாகவும், பிற படங்களின் தழுவல், காப்புரிமை பிரச்சனைகள் இல்லாமலும் இருக்க வேண்டும். இக்குறும்படங்கள் இதற்கு முன் வெளியிட்டு இருக்க கூடாது. போட்டியின் முடிவு அறிவிக்கும் வரை பொதுவெளியிலும் பதிவிடுதல் கூடாது. *(குறும்படத்தில் இதற்கான ஒப்புதலைத் தெரிவிப்பது அவசியம்)*
6. குறும்படத்தை செல்பேசி மூலமாக பதிவு செய்து அனுப்பத் தடை இல்லை.
7. கருப்பொருள், புதுமை, படைப்பாக்கத் திறன், காட்சிப்படுத்திய விதம், திரைக்கதை, வசனம், ஒளிப்பதிவு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும். வரப்பெறும் குறும்படங்கள் திரும்ப அனுப்பப்படமாட்டாது. நடுவர்களின் முடிவே இறுதியானது.
8. **வான்முகில் அலுவலக முகவரிக்கு** பென் ட்ரைவ் (pen drive) மூலம் நேரிலோ, கொரியர் /பதிவுத் தபாலிலோ குறும்படங்களை அனுப்ப வேண்டும் அல்லது we transfer இணைய வசதி மூலம் creudhr75shortfilm@gmail.com மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.
9. இக்குறும்படங்கள் அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தில் பயன்படுத்தப்படும்.

வெற்றி பெற்றவர்களுக்கு ஜனவரி 26, 2023 - குடியரசு நாளை மையப்படுத்தி வான்முகில் ஏற்பாடு செய்யும் நிகழ்வில் பரிசுகள் வழங்கப்படும். நாளும், நேரமும், இடமும் பின்னர் அறிவிக்கப்படும்.

**பரிசு விவரம்:**

முதல் மூன்று போட்டியாளர்களுக்கு வெற்றிப் பரிசுகளும், 5 நபர்களுக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

- **முதல் பரிசு:** 10,000/- **பத்தாயிரம் ரூபாய்**
- **இரண்டாம் பரிசு:** 7,000 **ஏழாயிரம் ரூபாய்**
- **மூன்றாம் பரிசு:** 5,000 **ஐந்தாயிரம் ரூபாய்**
- **ஆறுதல் பரிசு:** 2,000 **இரண்டாயிரம் ரூபாய்**

**மொத்தப் பரிசுத் தொகை: 32,000/- முப்பத்தி இரண்டாயிரம் ரூபாய்**

## 2. கல்லூரி மாணவர்களுக்கான மீம்ஸ் போட்டி

### கருப்பொருள்:

**1.மனித மாண்பு 2. சுதந்திரம் 3. அனைவருக்கும் நீதி**

**இவற்றில் ஏதேனும் ஒன்றை மையப்படுத்தி மீம்ஸ் வரையலாம். ஒருவரே ஒன்றுக்கும் மேற்பட்ட மீம்ஸ்களை அனுப்பலாம்.**

### மீம்ஸ் போட்டிக்கான விதிமுறைகள்:

1. மீம்ஸ் **போட்டியில் பங்கேற்போர்** https://forms.gle/2qfWY8DwNsezJfvz6 **என்ற கூகுள் படிவத்தில் முன்பதிவு செய்ய வேண்டும்.**
2. மீம்ஸ்கள் கையால் வரையப்பட்டதாகவோ, மின்னணு வடிவிலோ இருக்கலாம்.
3. மீம்ஸ்கள் தங்களின் சொந்தப் படைப்பாகவும், பிறவற்றின் தழுவல், காப்புரிமை பிரச்சனைகள் இல்லாமலும் இருக்க வேண்டும். மீம்ஸ்கள் இதற்கு முன் வெளியிட்டவையாக இருக்க கூடாது. போட்டியின் முடிவு அறிவிக்கும் வரை பொதுவெளியிலும் பதிவிடுதல் கூடாது. *(இதற்கான ஒப்புதலைத் தெரிவிப்பது அவசியம்)*
4. கருப்பொருள், புதுமை, படைப்பாக்கத் திறன், காட்சிப்படுத்திய விதம், வசனம், ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும். வரப்பெறும் மீம்ஸ்கள் திரும்ப அனுப்பப்படமாட்டாது. நடுவர்களின் முடிவே இறுதியானது.
5. கையால் வரையப்பட்ட மீம்ஸ்கள் **வான்முகில் முகவரிக்கு** நேரிலோ, கொரியர் / பதிவுத் தபாலிலோ அனுப்ப வேண்டும். மின்னணு வடிவிலான மீம்ஸ்கள் **.jpg** or **.jpeg** format **இல்** creudhr75memes@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்ப வேண்டும்.
6. இம்மீம்ஸ்கள் அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தில் பயன்படுத்தப்படும்.

வெற்றி பெற்றவர்களுக்கு ஜனவரி 26, 2023 - குடியரசு நாளை மையப்படுத்தி வான்முகில் ஏற்பாடு செய்யும் நிகழ்வில் பரிசுகள் வழங்கப்படும். நாளும், நேரமும், இடமும் பின்னர் அறிவிக்கப்படும்.

### பரிசு விவரம்:

ஒவ்வொரு கருப்பொருளிலும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கு வெற்றிப் பரிசுகளும், 5 நபர்களுக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

1. **முதல் பரிசு:** 5,000/- ஐந்தாயிரம் மட்டும்
2. **இரண்டாம் பரிசு:** 3,000/- மூவாயிரம் மட்டும்
3. **மூன்றாம் பரிசு:** 2,000/- இரண்டாயிரம் மட்டும்
4. **ஆறுதல் பரிசு** 1,000/- ஆயிரம் மட்டும்

**மொத்தப் பரிசுத் தொகை: 45,000/-**

## 3. கல்லூரி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி

**கருப்பொருள்:**

**1.மனித மாண்பு 2. சுதந்திரம் 3. அனைவருக்கும் நீதி இவற்றில் ஏதேனும் ஒன்றை மையப்படுத்தி ஓவியம் வரையலாம். ஒருவரே ஒன்றுக்கும் மேற்பட்ட ஓவியங்களை அனுப்பலாம்.**

**ஓவியப் போட்டிக்கான விதிமுறைகள்:**

1. **ஓவியங்கள் மேற்கண்ட கருப்பொருளை மையப்படுத்தி அமைந்திருத்தல் அவசியம்.**
2. ஓவியப் போட்டியில் பங்கேற்போர் https://forms.gle/zU19JzXSTMgANccaA **என்ற கூகுள் படிவத்தில் முன்பதிவு செய்ய வேண்டும்.**
3. ஓவியங்கள் தங்களின் சொந்தப் படைப்பாகவும், பிறவற்றின் தழுவல், காப்புரிமை பிரச்சனைகள் இல்லாமலும் இருக்க வேண்டும். ஓவியங்கள் இதற்கு முன் வெளியிட்டவையாக இருக்க கூடாது. போட்டியின் முடிவு அறிவிக்கும் வரை பொதுவெளியிலும் பதிவிடுதல் கூடாது. *(இதற்கான ஒப்புதலைத் தெரிவிப்பது அவசியம்)*
4. கருப்பொருள், புதுமை, படைப்பாக்கத் திறன், காட்சிப்படுத்திய விதம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும். வரப்பெறும் ஓவியங்கள் திரும்ப அனுப்பப்படமாட்டாது. நடுவர்களின் முடிவே இறுதியானது.
5. ஓவியங்கள் கையால் வரையப்பட்டதாக இருக்க வேண்டும். கையால் வரையப்பட்ட ஓவியங்கள் **வான்முகில் அலுவலக முகவரிக்கு** நேரிலோ, கொரியர் /பதிவுத் தபாலிலோ அனுப்ப வேண்டும். அதே ஓவியத்தை ஸ்கேன் செய்து **.jpg** or **.jpeg** format **இல்** creudhr75drawing@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்ப வேண்டும்.
6. இவ்ஓவியங்கள் அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தில் பயன்படுத்தப்படும்.

வெற்றி பெற்றவர்களுக்கு ஜனவரி 26, 2023 - குடியரசு நாளை மையப்படுத்தி வான்முகில் ஏற்பாடு செய்யும் நிகழ்வில் பரிசுகள் வழங்கப்படும். நாளும், நேரமும், இடமும் பின்னர் அறிவிக்கப்படும்.

**பரிசு விவரம்:**

ஒவ்வொரு கருப்பொருளிலும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கு வெற்றிப் பரிசுகளும், 5 நபர்களுக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

1. **முதல் பரிசு:** 5,000/- ஐந்தாயிரம் மட்டும்
2. **இரண்டாம் பரிசு:** 3,000/- மூவாயிரம் மட்டும்
3. **மூன்றாம் பரிசு:** 2,000/- இரண்டாயிரம் மட்டும்
4. **ஆறுதல் பரிசு** 1,000/- ஆயிரம் மட்டும்

மொத்தப் பரிசுத் தொகை: **45,000/-**